

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் இன்று (9.10.2017) தலைமைச் செயலகத்தில், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலை தூய்மையான முறையில் சிறப்பாக பராமரித்து வருவதற்காக மத்திய அரசால் வழங்கப்பட்ட தூய்மை இந்தியா திட்ட விருதினை, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கொ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப., அவர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றார். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேவூர் எஸ். இராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை முதன்மைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கோ. பிரகாஷ், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் திருமதி ஆர். ஜெயா, இ.ஆ.ப., மதுரை மாநகராட்சி ஆணையர் டாக்டர் அனிஷ் சேகர், இ.ஆ.ப., மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் அறங்காவலர் குழு தலைவர் திரு.கருமுத்து T. கண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.